சிவமயம்

மகா கணபதி துணை



# குடாரப்பு திரு கணபதிப்பிள்ளை முருகையா—DAM அவர்கள் இயற்றிய

# அருள்மிகு நாகர்கோவில் நாகதம்பிரான் பாமாலை

இஃது அருள்மிகு நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையின் அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை.........

- நூலாசிரியர் கணபதிப்பிள்ளை முருகையா DAM

- முகவரி :- குடாரப்பு, நாகர் கோவில்

- முதல்பதிப்பு :- 2012-06-04

- பதிப்பு உரிமை :- நாகதாம்பிரான் நிர்வாகசபை

- மாற்றங்கள் :- நூல் ஆசிரியருக்கே

- அச்சகம் :- தீபன் அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சைவமும் தமிழும் வேரூன்றி வளர்ந்து நல்லொழுக்கமான குடிமக்களும், இறையுணர்வு மிக்க ஆன்ம ஈடேற்றம் விளைகின்ற பெருமக்களும் வாழ்ந்த வாழுகின்ற நமது ஈழத்தில் நார் கோவில் என்னும் இச் சிறுவூரிலே கோயில் கொண்டு அருள் பாலித்து வருகின்ற நாகேஸ்வரப் பெருமானின் தோற்றம், திருவருள், அற்புதம் ஆகியவை அடங்கிய இச்சிறு நூலை வெளியிட்டு அதைச் சைவப் பெருமக்களும் நாகேஸ்வரப்பெருமானின் மெய்யடியார்களும் படித்தும் பாடியும் எம்பெருமானின் திருவளைப் பெற்றுய்யும் வண்ணம் சிரந் தாழ்த்தி வேண்டிக் கொள்கிறேன்.

இதில் பற்பல சொற்குற்றம், பொருட்குற்றம் இருக்கலாம். பல்கலையும் கற்றுணர்ந்த பெரியோர்கள் நாகேஸ்வரப் பெருமானின் திருவருளை பற்றியது என்றமையினால் வழுக்களை நீக்கி, பிழைகளை மன்னித்திடுவதுடன் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,

குடாரப்பு,
நாகர்கோயில்,
க.முருகையா-DAM
(தொலைபேசி இல)
00447572710040



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

சைவ சமயம் எமக்கு வகுத்துக் காட்டும் நெறி திருவடி சேரல் ஆகும். "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல" என்று வள்ளுவப் பெருந்தகை கூறுவதும் இதுவேயாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியும் உள்ளன்பும் தன்னை மறந்த பக்தி நிலையை ஏற்படுத்தும். இந்நூலாசிரியர் டாக்டர் திரு.முருகையா அவர்கள் தமது குல "நாகதாம்பிரான் பாமாலை" உள்ளம் ஒன்றிப் பாடிய அருட்பாக்களாகின்றன.

"போற்றியருளுக நின்னரியாம் பாத மலர்
போற்றியருளுக நின்னந்த மாந்செந்நளில்கள்
போற்றியெல்லா உயிர்க்கும் தோற்றமாம்
போற்றியெல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்"

என்று மாணிக்கவாசகப் பெருமான் இறைவனது திருவடிகளை நாம் உய்ய ஆட்கொள்ளும் வண்ணம் போற்றித் துதிக்கிறார். இந்நூலாசிரியர் ஒரு சிறந்த வைத்தியராக இருந்தும் கூடத் தமிழும் தமிழருக்கும் கிடைக்கப் பெற்ற சைவப் பற்றாளர் என்பது இந்நூல் மூலமே நன்கு விளங்கும்.

அருள்மிகு நாகர்கோயில் நாகநம்பிரான் பாமாலை என்ற நூலின் அமைவிடச் சுருக்கம் நாகர்கோயில் பிரதேசத்தைக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துவதைக் காணலாம்.

"வெளிவயலோடை வாய்க்கால் வெண்மணல் வரிந்து கட்ட
களிகடலாளியிந்து கதயியோசையிசையிசைப்ப"

என்று அழகுற எடுத்துக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் உருவகத் தன்மையுள்ள அநேகம் பாடல்களை இப்பாமாலையிலேயே காண முடிகின்றது. உதாரணமாக

"ஐந்தெழுத்துடையோன் ஆதி அரவத்தை அணிந்ததேவி
வெந்த நீறுடைய மார்பன் மெய்யருள் இங்கண்டென்று
கைகளை நீட்டியந்தக் கடிகமளிலைகளெல்லாம்
சைகையை காட்டி மெல்லச் சரிந்தசைந்திடுதல்காணீர்"

என்ற பாடல் அற்புதமான எடுத்துக் காட்டாகும்.

"மந்திரமாவதும் மாமருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்கள் ஆவதும்
சுந்தரமாவதும் துாய்நெறி ஆவதும்
எந்தன் பிரான் தன் இணையடி தானே"

என்று திருவடிக்கு அற்புதமான விளக்கம் கொடுக்கின்றார் திருமூலர். அரன் தன் திருவடி அருளும் உருவாகி வந்த நாகதம்பிரான் அருட்புகழும் உருவருசருக்கத்தில் எடுத்துக் காட்டப் படுகின்றது.

"கங்கை நீர் சடை கொண்டுடை நாயகன்
அங்கையற் புனல் ஆடிடு தீர்த்தத்தில்
பங்கு பங்கெனப் பாவங் களைந்திட
இங்கமைந்தைந்து கேணியிலாடினார்"

என்று அற்புதமாகப் பாவங்களையும் ஐந்து தீர்த்தக் கேணிகளையும் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் நூலாசிரியரின் கவிநுட்பம் வியக்கத் தக்கது.

இலக்கிய கர்த்தா இலக்கியம் ஒன்றைப் படைக்கும் வேளையிலே உணர்ச்சிப் பெருக்கும் ஒரு வகையான தன்மறதியும் உள்ளவனாக மாறி விடுகின்றான். அதுவே மனோலயம் என்பர் அறிவர். அது மனவாசகம் கடந்ததென்பதை அருணகிரிநாதர் தனது கந்தரலங்காரத்திலே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாக்கும் வடிவும் முடிவும் இன்றி ஒன்று வந்து
தாக்கும் மனோலயம் தானே தரும்"

என்று கூறுவார். அந்த நிலையினையே இப்பாமாலை நூலாசிரியர் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய டாக்டர். முருகையா அவர்களும் அடைந்திருக்கிறார் என்றால் மிகையில்லை.

"வானுயர வருங் காற்றே வையகத்தைக் காப்பவரே
மானுடனாம் முருகையன் மனமுருகி வணங்குவதை
சீறுமரவமொடு சிவனாகிச் செழிப்பவர்க்கு கூறும்
ஒரு வார்த்தை கும்பிடுகின்றேன் குறைகேளாய்"

என லயித்து உருகுகிறார். பாமாலை என்பதை விட இது தமிழ் மாலை என்று கூறுவதே சாலப் பொருத்தமுடையது போலும். இப்பாமாலை நீண்டு வாழும் வளரும் என்பதில் ஐயமில்லை.

"வளர்க நூலாசிரியரின் நற்பணி"

திருமதி. சண்முகராஜா மணிமேகலை (B.A. Hons),
உள்ளூராட்சி உதவியாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**நம் எல்லோருக்கும் குலதெய்வமாய் விளங்கும் நாகதாம்பிரான் திருவருள் துணை நிற்க.**

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கைத் தீவின் வடபால் வடமராட்சிப் பகுதியில் நெய்தல், பாலை, மருதம் எனும் மூவகை நிலத்துடையதான நாகர் கோவில் எனும் பதியில் ஆன்மாக்களின் கலங்கரை விளக்காய் விளங்கும் சிறைமீட்ட தெய்வமாக விளங்கும் நாகர் கோயில் நாகதாம்பிரான் புராணம் எனும் நூல் வெளிவருவதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகை சிறப்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் நமது குலதெய்வத்திற்கு தலபுராணம் இல்லை என்ற கவலை தீர்ந்துள்ளது எனலாம். காலம் காலமாக நமது ஆலய மரபில் இறைவனின் பெரும் கீர்த்தியை பாடும் மரபு உள்ளது. வேத உபநிடதங்களில் ஆரம்பித்து இறைவனின் அருட்திறனை பாடும் பதினெண் புராணங்களில் இறைமூர்த்திகளின் அற்புதங்களை நாம் காணலாம். இவை பின்பு திருமுறைகளில் பரவி அவ்அவ் ஆலயங்களுக்கென உள்ள சிறப்பை கூறும் தலபுராணமாக உருமாற்றம் கொண்டது எனலாம்.

அவ்அவ் ஆலயங்களில் உள்ள மூர்த்தி, தல, அற்புத சிறப்புகளை கூறுவதே தலபுராணம் எனப்படும். இவ்வகையில் தான் திரு. முருகையாவின் தந்தையான கணபதிப்பிள்ளை அவர்கள் புளியம்பொக்கணை நாகதம்பிரானின் புராணத்தை பாடியுள்ளார் அத்தோடு நாகதாம்பிரானுக்கு பல விருத்தங்களையும் பாடியுள்ளார். தந்தை வழி நின்று தனயனும் நாகதாம்பிரான் பெரும் புகழைப் பாடும் தலபுராணத்தை இயற்றியுள்ளது சிறந்ததே.

நாகர்கோவிலை பூர்வீகமாக கொண்ட இவர்ளுக்கு நாகதாம்பிரானின் திருவருளால் தான் இத்தகைய பாமாலையை இயற்ற முடிந்தது. இந்நூல் ஒவ்வொருவரது வீட்டிலும் பாதுகாக்கப் பட வேண்டிய பொக்கிஷம். நம்மோடு நாகதாம்பிரான் இருக்கும் உணர்வை தரவல்லது. நாகதாம்பிரானின் அருளால் இந்நூல் ஆசிரியர் குடும்பம் சிறந்து வாழ வாழ்த்துகிறோம்.

**க.சிவசண்முக குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**"அரியுமரனு அமைந்தாங்கருளும் விரியும் படமெம்மிறை"**

நாகர்கோயில் குடாரப்பு வைத்தியர் கணபதிப்பிள்ளை முருகையா அவர்கள் எம்பெருமானுக்கு தலபுராணம் பாடி வெளியீடு செய்வதையிட்டு பெருமிதமடைகின்றேன். ஆவள்ர் தொடர்ந்தும் எம்பெருமானின் பூர்வீகத் தன்மைகளையும், அற்புதங்களையும் நூலுருவாக்க வேண்டுமெனவும் அதற்கு எல்லாம் வல்ல நாகேஸ்வரப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கின்றேன்.

ஓர் ஆலயத்தின் முக்கிய சிறப்புக்களாக மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன காணப்படுகின்றது. இவற்றிலே மூர்த்தி, தீர்த்தம், தலவிருட்சம் என்பவை கட்புலனால் அறியக் கூடியவை. ஆனால் தலத்தைப் பற்றி, அதன் சிறப்புக்கள் பற்றி நிகழ்ந்த அற்புதங்கள், பூர்வீகத் தன்மைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களை ஆலயம் சார்பாக வெளியிடப் படுகின்ற தலபுராணம், தலம் மீது பாடப்பட்ட பாடல்கள், ஆலயத்தில் நடாத்தப்படும் நிகழ்வுகள் போன்றவற்றின் மூலமே அறிந்து கொள்ள முடியும். அந்த வகையிலே வைத்தியர் க. முருகையா அவர்களால் வெளியிடப் படுகின்ற தலபுராணம் சிறப்புப் பெறுகின்றது.

எமது ஆலயத்தைப் பொறுத்த மட்டிலே பிற ஆலயங்களில் காணப்படாத பல தலச்சிறப்புக்கள் காணப்படுகின்றது. ஏம்பெருமானுடைய தலையாய அற்புதமாக சிறைமீட்ட நிகழ்வு காணப்படுகின்றது. இந்நிகழ்வை சித்திரிக்கும் முகமாக வருடாந்த மகோற்சவத்திலே ஏழாவது மகோற்சவமாகிய கப்பல் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு சிறைமீட்ட நிகழ்வும் காண்பிக்கப் படுகின்றது. மேலும் விஷ ஜந்துக்களால் கடியுண்டவர்கள் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் கிடைக்கும் திருவருளேறிய திருமருந்து மூலம் குணமடைகின்றமை, ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவிருட்சங்களில் ஒன்றாகிய மருதமரத்திலே வாசம் செய்கின்ற பட்சியின் (கழுகினப் பறவை) நிழல் பட்டு விஷக் கடித்தாக்கங்கள் நீங்குகின்றமை போன்ற பல அற்புத நிகழ்வுகளை யாவரும் அறிவர். அவை இன்றும் கூட நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நாகர்கோவில் குடாரப்புப் பகுதியிலே வாழ்ந்த தலைசிறந்த தமிழ்ப் புலமையாளர்கள் வரிசையிலே சுதேச வைத்தியர் திரு. செல்லப்பா கணபதிப்பிள்ளையும் ஒருவராவர். அவர் தம் வாரிசாகிய வைத்தியர் முருகையா அவர்களும் தாய் நாடு கடந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் தெய்வீக சிந்தனையோடும், தாய்மொழிப் பற்றோடும் சிறந்த சொல்லாடல்கள் மூலம் செய்யுள்களை ஆக்குகின்ற பாணி பாராட்டுக்குரியது. தலபுராணம் மூலம் அவரது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஈடேற எம்பெருமானை இறைஞ்சுகின்றேன்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோர்க்கும் வாழ்க"

மு.சிதம்பரப்பிளள்ளை (பௌராணிகர்)
பரம்பரைத் தலைவர் / நம்பிக்கைப் பொறுப்பாளர்,
பூர்வீக நாகதம்பிரான் ஆலயம்
நாகர்கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாற்றுகவிகள்

கோலமயி லாடு குகன் காதலையு வேண்டி
காலமதா லழிந்து வரு கவிதையினுமீட்டு
சாலநா தம்பிரான் சிறப்பினையு மாய்ந்து
சீலவே சிலவற்றைக் குறைத்துமே கூட்டி
ஏலவே கொடுத்தகுடா ரப்புமுரு கையன்
சேலரு சிறப்பிதனைச் சிற்று நடையாக
ஆலவது கொண்டெவரு மறிந்து விடலீதே
தாலவது தக்கதென சாற்றிடுவ மன்றே.

**(சிவபக்தன் செம்பியனூர் பொ.தர்மகுலசிங்கம் அவர்கள்)**

சித்த வைத்தியச் சிறப்புநெறி கற்றோன்
உத்தம கணபதிப் பிள்ளையுறு மைந்தன்
வத்தா வருள்வரு வேதிநாகர் பதிக்
குத்தநா தம்பிரா னுக்கெத்த புகழை
மெத்தத் தெளிவாயு மியைத்தவிக் கவிகள்
பத்தர் பெருந்தகை பாடித் துதித்திட
ஒத்தவொரு கைநூலு வாகியே பக்திக்கு
வித்துவா யாகிவிட வியந்துரைப் போமே.

(குக அன்பன் குடாரப்பூர் அ.அ நடராசா அவர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


* காப்பு.
* கடவுள் வணக்கம்
* பாயிரம்
* உருவரு சருக்கம்
* திருவருட் சருக்கம்
* வாழ்த்து
* தோத்திரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மகாகணபதி மூர்த்தியே நம
# அருள்மிகு நாகர்கோயில் நாகதம்பிரான்
## பாமாலை
### காப்பு
#### விநாயகர்

மூசிக மேலவ முக்கணன் மைந்த
காசினிற் குளக்கரை கடுகி யிருப்ப
தோசிக ளறுப்பவ தொந்திவி நாயக
ஆசிகொ டுப்பவ ரடியினைத் தொழுவோம்.

#### சிவம்

தாண்டவ மாடிய தலையணி கங்கய
மாண்டவ ரெரிபுதி மகிழ்ந்துட லணிபவ
வேண்டுவ தருளுறு வித்தகப் பிஞ்ஞனை
தாண்டடி போற்றித் தணிந்து வணங்குவோம்.

#### சக்தி

உடலனுட் சக்தியா யுறைந்தே யிருப்பவள்
மடமழலை யரசனின் மகளெனப் பிறந்தவள்
சுடலைநீ றணியனின் சுந்தர வுமையின்
தடமலர்ப் பாதம் தணிந்தி றைஞ்சுவமே.

#### முருகன்

முத்தமிழ் வித்தக சக்தியின் சொத்தென
கைத்தலம் கொண்டொரு சக்திவேல் கொண்டனை
சுத்தகம் கொண்டவெம் சுப்பிர மணியனாம்
வித்தகத் தானடி வணங்கிடுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகதம்பிரான்

வளரத்தி மரத்துற்ற விழுதாலே தன்னுருவை
அழகான படநாக மொடுநாக லிங்கமாய்
வளமாகு நாகர்பதி வைகியருள் நல்கிவரும்
எழுநாக தம்பிரான் தாள்களிற் தாளுவாம்.

# கடவுள் வணக்கம்

## மருதடி வைரவர்

பிரமனின் சிரத்தி லொன்று பிரிந்தொரு வீரனாக
தருநிற கரியுங் காவல்த் தண்டம் வாழ் சூலினோடு
மொருகாவல் நாயிலேறி உற்றதோர் காவலாகு
மருதடி வடுகன் றாளை மகிழ்ந்து வணங்குவோமே.

## கண்ணகையம்மன்

மன்னியோர் சிலம்பி னோடு மதுரையில் நீதி கேட்டு
எண்ணிய தாற்றி யாறிக் கண்ணகைத் தெய்வ மாக
வெண்மணல் வெளியே கொண்டவண்மையாம் நாகர்கோவில்
கண்ணகைத் தாயின் செல்வ இணைகழல் வணங்குவோமே.

## சுடலைப்பிட்டிப் பிள்ளையார்

வெகுகளியு முறு புனலும் வறு வுப்பு நீரோடை
தகு மகிழு வயலோரத் தொரு தெய்வ நாயகரே
மிகு கமழு கமலத்து மொரு காலை மடித்தமர்ந்தான்
தெகு சுடலைப் பிட்டியுறை தெங்வந் தாள் சரணாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரர்

தன்னையே தெய்வமாகத் தக்கன் செய் தவத்தை நீக்கி
முன்னையோ கோரமான முதிர் சடைக் காளியோடு
வன்னுமோர் காவல் தெய்வ முறு நாகர் கோயிலுற்ற
விண்ணனாம் வீர பத்திரக் கடவுளைத் தொழுதல்செய்வோம்.

## பெரியதம்பிரான்

அருள் ஓங்கு வேதங்க ளனைத் துணர்ந்து
உருகு மடியார்களுக் குளத்தே நின்று
திரு பெருகு நாகர் பதி தன்னிலுற்ற
பெருதம்பி ரானடிகள் போற்றல் செய்வோம்.

## சரஸ்வதி

வெண் கமல வாசனம் வீற்றிருக் குந்தாயே
பொன் பொருள் வீரதீரம் புகலுகல் வீயேயான
நுண்பெறு கலைகட் கெல்லாம் நிறையுமோ ரிறைவியாகும்
பெண் தெய்வத் திருவடியைப் போற்றி வணங்குவோமே.

## சமய குரவர்

அகவை மூன்றினிலே ஞானப் பாலினைப் பெற்றோன் றாளும்
தகுமெனச் சிவனைத் தானே தூதனாய்ச் சென்றோன் தாளும்
எகுமெனப் புனலி னுள்ளே யேய்ந்திட்ட அப்பர் தாளும்
நகு நரியைப் பரியாய் நாட்டியோன் தாளும் போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனடியார்கள்

தவமொடு தான தர்மம் தம்புல னொடுக்கி யென்றும்
பவமுடை யாது பஞ்சாட் சரமய ராது பாரிற்
தவமணி காவி நீறு தரிப்ப ராகித் தாவுஞ்
சிவனடி யார்கள் செல்வச் செழுமல ரடிது திப்பாம்.

## திருநந்திதேவர்

நான்முகன் முதலா மமரர்க ளேத்த
வான்மதி கங்கை வளர்சடை மேவிய
கான்மலி கயிலையிற் காவல் செய்திடும்
ஆன்முக நந்திதன் னடிகள் ஏத்துவாம்.

## நாகம்

பரந்தாமன் படுத்துறங்கு பஞ்சணைய னாகி
பரமனார் கழுத்திலே படமெடுத் தாடி
பரனாரு லிங்கத்தைப் படத்தா லடக்கி
பெருநஞ்சு கொண்டநா கந்தாள் பணிந்தோம்.

## சண்டேசுரர்

ஐந்தெழுத் தானுடை யருளினைப் பெறவே
உந்துபூ சனையா லருட்சித் தேத்திட
வெந்தனாய் வந்தபி தாவினை வெட்டிய
முந்து சண்டேசுரர் முன் சரணமே.

**கடவுள் வணக்கம் முற்றுப் பெற்றது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

மறுவொன் றிணையுமிலா மொரு நாக தம்புகழை
யறுமுகத் தான் புகழறிந்து வணக்க மிடு
தறும குலத்துறு தயவினிற் பணிந்ததை
உறுமன தோனென உய்த்திடுவேனே.

முத்தமிழ் வித்தாம் முறையே யேகிய
வித்தகக் கலைஞர்க்கு விளைந்திடுவே னொன்று
பித்தர் பேதையர் பிதற்றிய தானவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.

எங்க ராயுமோ றியல் பது வாகிட
தங்கட னெனநாக தம்பிரா னருளுறு
மங்கவற் கோர்புரா ணம்மே யமைக்கென
நங்கிடைக் கொண்டதை நவின் றுடுவேனே.

கண்கரை காணாப் பாற் கடலுற்ற தோர் பூனை
நன்றேகி விடாததை நக்கிப் புக்கென
கொண்டே நா நாவலாய் குலநாக தம்புகழ்
உண்டே னுள்ளதை யுவந் தழிப்பேனே.

அன்னம் பாலருந் தரு தன்மை யாமென
சின்னறி வுற்றவென் சொற்களில் பாழெனில்
உன்னு மேற்றறி வுற்றவர் பொறுத்திடல்
அன்னை சேயினை யணைத்திட லொப்பாம்.

பன்னூ றாண்டுகள் பழைந்தவ ராயின
மன்னு தம்பிரானுமோ முற்ற கோயிற் கதை
உன்னுவ னிளநடை யெவரு முணர்ந்திட
அன்னவ னருள்பெற் றுயர்ந்திடு வீரே .

பாயிரம் முற்றுப் பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைவிடச் சருக்கம்

பெருமூன்று மலங்களினு முருபிடியி லுற்றோரும்
வருநோய்கள் விசசந்து வருபிணிக ளுற்றோரும்
திருவாக வுய்த்துத்தாம் திளைத்தேறி நற்கதிக்
கொருநாகர் பதியுற்ற குருவர வுருவேபோற்றி.

நாகரா முதியசாதி நகரமா யமைத்தே வாழ்ந்த
தாகமுன்னோர்கள் சொன்னா ரித்துட னுற்றநாக
தேகமே கோயிலாகத் திகழ் வதினாலே இத்து
நாகரு கோயிலாச்சே நெடுமுடை நாளதாக.

அலைகட லிந்துமுத்தி னன்றியே வடபாகத்து
வலைபடு கடலோரத்து வந்தபருத் துறையதாக
தொலையிலீ ரைந்துகல்லுத் தொண்டைமான் கரையோரத்தில்
விலைபெறு களனிசோலைக் கண்மையி லுண்டேநாகர்.

வெளிவய லோடைவாய்க்கால் வெண்மணல் வரிந்துகட்ட
களிகட லாழியிந்து கதறியோ சையிசைப்ப
புளிபனை தென்னைவில்வை புங்குடன் மருதே நாவல்
தெளிவுறு சோலையுண்டு தெரிந்திடு மிடமிதாமே.

வானரந் தாவியோடி வந்தரை முறையே கொள்ளத்
தானதோ வாலாபட்சி தம்மிடத் துள்ளே மிள்ளத்
தேனவ னுள்ளே கொள்ளும் திருத்தல மிதுதானென்று
மானவ ரறிதலீதே மனத்தினில் பதிந்திட்டாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத் துடையோனாதி யரவத்தை யணிந்த வேதி
வெந்த நீறுடைய மார்பன் மெய்யருள் இங்குண் டென்று
கைகளை நீட்டியந்தக் கடிகம ளிலைக ளெல்லாம்
சைகையைக் காட்டி மெல்ல சரிந்தசைந் திடுமே காணீர்.

பன்னுகி லோதுவார்கள் பாடல்க ளாற்று வோர்கள்
உன்னியே பயனுரைப்பா ருயரவு சதமே யீவார்
எண்ணமே லண்ணாவிய்மா ருறுமர சேவல் செய்வார்
சொன்னவ ருள்ளவூராம் சிறுநாகர் கோவில் காணும்.

நாகையா வெனவோ தாது நற்கரு வாற்றா தோரும்
வேகையா யுருவை வைத்து வீட்டினில் வணங்கா தோரும்
ஈகையே செய்யா துற்ற உளக்குறை வோரு மெந்த
வேளையு மிந்த வூரில் வாழ்வதே யில்லை யென்பாம்.

வண்ணமாம் கண்ணகைக்கோ வடக்காலே கோயிலுண்டு
எண்ணமாய் மேற்கேபெரிய தம்பிராற் குற்ற கோயில்
அண்மையாங் கிழக்கே சுடலைப் பிட்டியிற் பிள்ளையாரும்
செண்மையா முருகன் சோழன் குடியிருப் பானுமுண்டே.

நற்பெண்டு கட்கேணி நவிலுகிலோ சக்தி தீர்த்தம்
வெற்றுப்புக் கேணியுமோ விளங்கிடுச மூர்த்தி தீர்த்தம்
உற்றநாகக்ணேி சம்புக்கேணி உறுநாக சிவதீர்த்த முறையுமாக
மற்றுமுளமார் கழிக்கேணி யாகுதனு தீர்த்தமதாம் சுற்றமுற்றே.

## உருவரு சருக்கம்

தவமோடு தான தர்மம் தவமணி காவி நீறு
சிவமுட நாமமைந்து சரமய ராது வோதும்
பவமுறு பக்தன் னேகாம் பரிபொற்கொல் பாலனத்தோ
னுவமைய னுற்றா னங்கே யுகத்துறு சைவமேலோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தடி வணக்கஞ் செய்த மக்களைக் கண்டோ மன்னன்
சிரத்துறு சிந்தை கொண்டு சிவனடி யார்களுக் கோர்
உரத்துறு சிலை சமைக்கச் சிந்தை வேறற்ற னாக
முரத்தறி வித்தானந்த முதிய வேகாம் பரிக்கே.

ஆந்தை யோதரு முந்தைய நாயகன்
சிந்தை யாவுள மெம்மிடத் துய்த்திட
விந்தை முந்திய மாலுறு பஞ்சணைக்
கெந்தை யாளனைக் காட்டிட வெண்ணினார்.

மன்னவ னாணை கேட்டு மெதிருரை யாத பொன்னான்
என்னவ தறிஞனாகி யிறையினை யெண்ணித் தூல
அன்னவவன் கனவிற் றோன்றி யருளுருவான சோதி
சொன்னதே யுருவமைக்கச் சுடர்மரத் தடிக்குச் செல்வாய்.

கண்டனன் மகிழ்ந்து பாடிக் கடவுளை வணக்கஞ் செய்து
கொண்டொரு விளக்கு மேந்திக் குளிர்மரத் தடிக்குச் செல்லக்
கண்டொரு போது மில்லாக் கனகிளை யத்தி யொன்று
விண்டிடு நாக பாம்பாய் விழுதினிலாடக் கண்டான்.

விழுந் துடனே வணங்கி யெழுந்ததோ வுருவமென்று
தழுதழு குரலா யைந்து தலையுடை நாகஞ் செய்ய
தொழுதுடை விடையு மேற்று தாம்பிரத் தாலு மைந்து
பழுதிலாப் பட நாகத்தைப் பதித்தது வுண்மையாமே.

உலவிய ர.:.து கேட்டு உண்மை பொய் யறியராகி
மலடிபாற் சுரப்ப துண்டோ மண்ணும் பொன்னாவ துண்டோ
உலகினிற் றாயில் லாதோ ருயிரினுமாவ துண்டோ
தயலுற்ற வத்திமேலே தண்டுண்டோ வதில் நாகமுண்டோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பரி கசித்தே யுய்த்து வண்ணிய திடத்தை யேகக்
கனத்தொரு விழுது வைந்து கண்ணுடை நாக பாம்பாய்
படத்தினை விரித்து ஆடிப் பன்னியே சுருங்கிப் பாம்பாய்
வனத்தது விதவிதமாய் வகுபல சேட்டை செய்தே.

கண்டவ ரதிசயத்தைக் கடவுளைக் கண்ணுற்றோமே
எண்டுமே மகிழ்துபாடி யண்டையில் விழுந் தணங்கித்
தண்டமே படம்விரித்துத் தன்னுரு விது தானென்று
கொண்டதே யுருவமந்தக் குலதெய்வ நாகங் காணீர்.

## வேறு

இன்ன துல்லிய லெய்த லனைவரும்
சொன்ன குளவளைச் சிறுகுளத் தாடியே
பண்ணு பதிகங்கள் பாவுடை வாயராய்
வெள்ளை நீறணி வேதியர் போன்றனர்.

சுண்ண மண்ணினாற் செய்ததோர் மேடையு
மெண்ணு வெள்ளையு மேற்பந்த லுமிட்டு
வண்ணத் தோரணம் வாழையுங் கட்டியே
எண்ணைய் சாத்தி யிருப்பிட மாய்த்தனர்.

பொங்கல் வைத்துப் புதுப்பழங் கள்கொண்டு
தெங்கிள நீர்தரு தேன்பசு வின்பால்
வெங்க ரும்பொடு வெற்றிலை பாக்குவைத்
தங்கொரு மடை தானும் பரப்பினர்.

பட்டுச் சாத்திப் பெருவரி நீறு பொட்
டெட்டுத் திக்கு மிசைக்கு மணி யொலி
வட்டச் சாமரை யாகு சல்லாரிகள்
கெட்டி மேளங் குடை கொடி யாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்குக் காவடி தங்கக்கூர் கொண்டல
காக்கி முள்மிதி தண்டையுந் தாக்கியே
பாலிற் செம்புகற் பூரத்துச் சட்டிகள்
நேவிக் காதலில் நேர்த்திக ளாற்றினார்.

வாசமிகு மலரி வில்வமே செம்பருத்தை
நேசமுறு மல்லிகை பொன்னொச்சி தேமா
வாசமுறு தாமரையு மானபல மலர்தூவி
பூசனையு மாற்றிப் புகழ்பாடி மகிழ்ந்தனரே.

தொண்ட தோத்திர தாரணஞ் செய்தனர்
கண்ட கண்ட கவிதையைப் பாடினர்
அண்டு வந்த விறைவிற் கரோகரா
தொண்ட ரென்னத் தொழுதுநின் றாடினர்.

அச்ச முற்றவ ரய்யன்பே ருற்றனர்
கொச்சை யாளர் குடிவெறி யாளர்கள்
மச்ச முண்பவர் மற்று மறந்தனர்
இச்சிவ னுற்ற இப்பதி மன்னியோர்.

கங்கை நீர்சடை கொண்டுடை நாயகன்
அங்கையற் புனல் ஆடிடு தீர்த்தத்தில்
பங்கு பங்கெனப் பாவங் களைந்திட
இங்கமைந் தைந்து கேணியி லாடினார்.

அன்னி தேசிக ராலய முற்றவர்
பன்னு நற்பர தேசிபண் டாரிகள்
சன்னியாசி தவசிக ளோதுவார்
அன்ன தானம்பெற் ராறி யகன்றரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுறு பூசை செய்து நற்புரா ணங்கள் பாடி
வேளறு விரதிருந்து வெம்படை மடையு மிட்டு
கோளறு நாயகற்குக் கும்பிடு பலவுஞ் செய்து
வாழுதல் கடமையாக வழி வழி வந்திட்டாரே.

## திருவருட் சருக்கம்

கொன்றை யோர்மதி கங்கையைச் சூடிய
நன்றி தாமென நாகர் பதியுற்று
வென்ற திசய மேபல வுண்டெனும்
அன்று சொற்ப மறிந்துரைப் பேனிதே.

### வேறு

பகைத்திடு காலுங் கோளும் பண்ணிய வினையுங் கூடி
உதைத்திட மாந்தருக்கு உண்டது விசம தாகி
படைத்திடு பாம்பு பூரான் பன்னரு விச சந்துக்கள்
கடித்திட விசமதாகிக் கண்டுநோ யுறுவராமே.

கண்டமே லறிவு சோர்ந்து கண்கள் பஞ்சாகி வாடி
உண்டது வாந்தி கொண்டு உடலுவே தனையாற் கூடி
கொண்டிடு மறிவு மங்கிக் குவலயத் தேவை நாடி
அண்டியே யுள்ள நாகத் தரவத்தா னடியிற் சேர்வார்.

சேரவே சிவ சிவா வென்று சிவாலயத்தை யுச்சரித்து
சாரவே குளவா ழத்துக் குளத்தினில் நானம் செய்து
கூரமெய் யடிய னாகிக் கும்பிட்டு வலமே வந்து
பேரரு மருந்தைப் பெற்றுப் பூசியுங் குடிப்பராமே.

நம்பினார்க் கருணை யீயு நாதனு மனதி ரங்கித்
தன்னடி யார்க ளுக்காய்த் தனதருள் பலிக்க வென்று
வெம்பினை யணைத்ததென்ன தாழ்கல்லு மிதந்த தென்ன
எம்பிரா னருளு மங்கே யெதுகலித் தவழ்ந்த தன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும்மே விடமுறிவு உற்றவ ரறிவு தேறி
போகும்மே வாரம் மாத மொருமண் டலமுமாக
தாகவே விரதிருந் தன்ன தானமு மளித் துகந்து
வாகவே வீடு நோக்கும் வல்லரு ளாள ரன்றோ.

அரவினை வைத்துப் பூசை யாற்றிய வன்று தொட்டுப்
புரிதனில் விசசெந் துக்கள் புல்லிய புண்கள் குட்டை
வருதனி லெங்கு மேகா வொருதம்பி ரானை வேண்டித்
தருமருந் துண்ண லின்றும் தன்னவர் முறையு மன்றோ.

கன்னமா மருளை யீயும் கடவுள் நா தம்பிரானை
உன்னுவோ ருய்வார் வாழ்வு உறவு சந்தோ பெருக்கும்
எண்ணிய கரும மாறு மில்லற மினிதே வாழும்
திண்ணமா மமரர் வாழ்த்த திகழ் சிவ கதியு முண்டே.

## அதிசயச் சருக்கம்

நாடெலாங் கட்டியாள நினைத்தபோத் துக்கீசோர்கால்
வீடுறு மக்கள் மாய விரும்பியே குடிபெருக்கத்
தேடிய வீரசேனை தெப்பமு முற்ற ராகி
நாடெலா முந்து நாடி நகர் நாக பதிபுக்காரே.

புக்கிய வீரசேனை புகுந்திட்ட வாழிசூழு
கக்கரை யாழ்ப்பமாகக் கவுத்தந் துறையிற் கப்பல்
ஒக்கவே யோட்டிக் கட்டி ஒன்றுபட் டூரினுள்ளே
தக்கிய பொருள் பண்டங்கள் தம்முடன் காவிச் சென்றார்.

சென்றவர் மக்களுக்குச் சிறுபரி சாகத் தாறோம்
இன்னது மட்டுமல்ல தெனும்பல தாகவுண்டு
நன்வள நாட்டினுள்ளே நல்வள நகரம் சேனை
சொன்னபே ரின்பமாகச் சுகித்திட வாழலாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னுபே ராசை வார்த்தை பற்பல வாகக் கூறி
அன்னவருள்ளோ ரெல்லா மழைத்திட விழைந்த காலை
சொன்னரிப் புண்ணியபூமிச் சிறு நாகக் கடவுள் விட்டு
மன்னவே மாட்டோமென்று மறுதலித் துரைத்திட்டாரே.

மறுத்தது கேட்டுமாற்றான் மருகிமேற் சீற்றமாகி
பொறுத்தது போதுமேற்றும் புகன்றிட யாதுமில்லை
உறுத்தது சட்டமாக வுள்ளவ ரேனையோரும்
கறுத்தவக் கப்பற்குள்ளே கட்டெனப் புகுந்திட்டாரே.

ஐயகோ நாகதேவா வருண்மறை யறிந்த வேந்தே
இய்யிது தகுமோ வுன்னை யிறுத்திடல் முறைய தாமோ
உய்யவுன் னுருவங் காட்டி யுய்த்திடு வழியை மீட்க
கையைமேற் கூப்பி யந்தக் கடவுளை வணங்கிட்டாரே.

போற்றலர் புரமெரித்தான் புலியுரி தானுடுத்தான்
மாற்றல ரகந்தையாலே மன்னியோர் மீட்கவென்று
தோற்றலாய் நாகபாம்பாய் திசைத்திடு சுக்கான் மீது
ஏற்றலா யமர்ந்து வைந்து வலகினைத் தூக்கிக் காட்ட

மாலய னறியா மூல மூர்த்தியின் கருணை கெட்ட
காலம துற்ற போத்துக் கேயனு மறிஞனாக
ஆலம துண்டான் மேலை யாய்ந்திட லஃது மாமோ
தானுறை யுற்ற வாளாற் றடக்கென வெட்டிட்டானே.

வெட்டவே யுதிர மெங்கும் வீறெனெச் சீறிச் சிந்தி
தட்டிய விடமதெங்கும் சீறிய நாக பாம்பாய்
ஒட்டவே யிருப்புக் கொள்ளா வோடியு மாடல் காட்டத்
துட்டனு மஞ்சி யேங்கி தூரவே யோடிப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலு மசையதாகிக் கடுகி மண்ணுட் புதைந்து
ஒப்புத லேதுமற்று வுப்பிய வுதரம் போலாய்ச்
செப்பிடிற் றுறையுஞ் சாற்றுச் சிந்தனை யானவேளை
அப்பெரு மடியரங்கே யருளுடை வாக்குமீட்டார்.

இப்பதி மக்களெல்ல மிறக்கிடில் நீயும் மீள்வாய்
செப்பியே குறிப்புக் கொள்ளச் சிறுதுளி மாவால் சுட்டிக்
காட்டிய பேர்களெல்லாம் கரையினைப் பெற்றபோது
ஆட்டிய கப்பற்குள்ளே யரவங்க ளாடலுற்றாம்.

விழுந்துட னேவணங்கி விடைதரு வாயேயென்று
கொழுந்தெனக் கையைக்கூப்பிக் கும்பிடு பலவுஞ் செய்து
எழுந்தரு நாதனுக்குத் தம்மறியாமை கூறத்
தழுதழு நாகமெல்லாந் தன்னிலே கலைந்து போச்சே.

சிறைமீட்ட தெய்வந் தாழைச் சிரசுமேற் கொண்டராகித்
தறைபுரட் டாதிமாதத் தகுதிபூ ரணை மறுநாள்
உரையுறு கப்பலாட்டி யுற்றதைச் சித்தரித்து
வரைபெற வழிபாடாற்றி வருவதும் முறையதாச்சே.

**வேறு**

மாறிவரு மேயரசா லேற்றுவரு மாறு
கூறுசம யத்தவரு கும்பிட மறுக்க
தாறுமோ றாகவவர் தங்கட் புகுந்து
வேறுவே றாகுசில விந்தைகளைக் காட்டி.

ஆகுதன் னுருவத்தை யரவமாய்க் காட்டி
யேகித்தன் னிருப்பிட மிருட்டி யுமறைத்து
வாகுவெதிர் கண்டோரை விடத்தால் மடக்கி
யாகுதன் னடியவ னாக்கிடுத லுண்டே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

மன்னியோர் சமயம் பாரார் மறுவறு வெதுவுஞ் செய்யார்
உன்னிய தம்பிரான் பேர் உரைத்துப்பு சனையு மாற்பர்
எண்ணியே கரும மாற்பர் இணைந்திடு காலமட்டும்
அன்னவ ராற்றுங் கேடு வரிதென வாகுமன்றே.

**அதிசயச் சருக்கம் முற்றுப் பெற்றது.**

## வாழ்த்து

தில்லையில் நடனடாடு சிவனொடு வுமையும் வாழ்க
தொல்லையா விடத்தைத் தாங்கு சிவனணி நாகம் வாழ்க
பல்லினிற் பாதியீந்த பிள்ளையா ரிசைந்தே வாழ்க
வள்ளிதெய் வானையோடு அறுமுகக் கடவுள் வாழ்க வாழ்க

சொற்பதத் தோத்திரங்கள் சீர்கப்ப லிசையும் வாழ்க
அற்புதத் தருளும் வாழ்க ஆனதன் னுருவும் வாழ்க
கற்பொடு நெறியும் வாழ்க கண்ணகைத் தாயும் வாழ்க
நற்கதி காக்கும் நாக தம்பிரான் வாழ்க வாழ்க
போற்றிடு தமிழும் வாழ்க புகழ் சைவம் தழைத்தே வாழ்க
சீற்றிய மழையும் வாழ்க சிவனடி யார்கள் வாழ்க
மேற்றிய சூலமாளு மருதடியபனும் வாழ்க
சாற்றிய கவிகள் வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

**வாழ்த்துப்பா முற்றிற்று**

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு நாகர்கோவில் நாகதம்பிரான் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்.

அத்திமர விழுதிலே அரவமாய் ஆடினாய்
ஐந்து தலைச் சுருவமானாய்
பக்தர்கள் வந்துன்னப் பாடியும் ஆடியும்
பணிந்துமே பூசை கொண்டார்
சித்தனாய் ஆகியே சிவபக்தி ஓங்கிட
சிவகோவில் அமையப் பெற்றாய்
குத்தமறு நாகர்பதிக் குடியான மக்களின்
குல நாக தம்பிரானே.

ஐந்தெழுத் துடையனே அரவத்தை அணிந்தனே
அலங்கார தாண்ட வத்தே
செந்தணல் நீறணி சிங்காரச் சடையனே
சிவகங்கை மதி சூடனே
உந்திரு நெற்றியில் ஒருசிறு கண்மேலும்
உற்றனே புலி மேனனே
வந்தருள் நாகர்பதி அர்த்த நாரீசனே
வளர்க நாக தம்பிரானே.

பெருவிடந் தீர்ப்பனே வருநஞ்சு நோயினை
வழுவில்லாத் தீர்க்கும் அருளே
ஒருகாலைத் தூக்கியே தில்லையில் ஆடியே
உலகினைக் காக்கும் இறையே
மருதொரு சோலையில் குருவாய் அருள் செய்து
குளவாளை நீர் ஆடினாய்
குருவாகக் கொண்டாரை கருவாகக் காத்திடும்
பெருநாக தம்பிரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றரை பாதியும் வெற்றரை மீதியும்
பெற்ற உன் கோயில் உள்ளே
உற்றதோர் பாம்பினுக் குற்றதோ பாதிவெண்
மற்றதோர் தங்க நிறமாம்
பெற்றிடும் உன்உரு பட நாகமோ பாதி
சுற்றியிரு சிவலிங்கமே
சுற்றிடும் கேணிகள் ஈரிரண்டோடு
மற்றுமொன் றாகும் அழகே.

கோயிலில் ஆடுவாய் குளத்தினில் ஆடுவாய்
கும்பிடும் அடியர் முன்னே
வாயிலில் ஆடுவாய் வளுக்கியே மறையுவாய்
வம்பேதும் உற்று நோக்காய்
தோளினைச் சுற்றியே துயிலாது ஆடுவாய்
துள்ளியே படம் எடுப்பாய்
காலினில் கவ்வுவாய் கப்பலில் ஆடினாய்
கண்கண்ட தெய்வம் அரவே.

மாற்றலர் வந்துன்னை மதிக்கிலா தீதெனில்
மனத்தினில் தோற்றம் அழிப்பாய்
காற்றாக உட்சென்று கண்ட படி சுற்றியே
கரைச்சல்கள் பல கொடுப்பாய்
வேற்றாக மீறிடில் வந்து முன் ஆடியே
வெந்தனாய் ஓடி மறைவாய்
ஆற்றாது மிண்டிடில் விடத்தால் மடக்கியே
ஆடியவன் ஆக்கும் அருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றினில் வாழுவாய் புதுமருந் தாக்குவாய்
புண்ணிய தலத்தின் உள்ளே
சற்றெனச் சேர்த்துமே சங்கடம் தீர்த்திடும்
சற்குரு ஆன பொருளை
மற்றவர் மண்ணெனில் குற்றமே என்றதை
கும்பிட்டு உண்ண வைத்து
நற்செய்யும் அடியவர் ஆக்கியே அருளுறும்
நகர் நாகர் நாமிதுவே.

ராகுவில் பாதியும் கேதுவில் பாதியும்
ஆனதும் உன் உருவமே
வேகுவாய் பறந்திடும் ஆலாவுக் கோர் உறவு
ஆனதும் இத் தலத்தே
போகுமே உன்விடம் பூசகர் கையினால்
பூசிய பெரு மருந்தை
ஆகுமென் றெண்ணியே ஆற்றலர் போற்றிடும்
நாகர் பதி வாழ் நாகமே.

பாற்கடல் அமிழ்திலே பாஷணங் கக்கியே
பாதகர் உண்ண மறுத்தாய்
பேற்புகள் கம்சனைக் காக்கவே குடையாகி
காட்டிலே காவல் ஆனாய்
மாற்றலர் உன்பதி மக்களைக் கவர்கையில்
பூட்டிய கப்பல் உள்ளே
சீற்றனாய் சென்றுமே சிறைமீட்ட தேவனே
சீர்நாகர் நாகம் இதுவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநூறு பாம்மதாய் பகைமுடித் தோடியே
பள்ளமாய் ஆக்கி வைத்த
நிலமாகும் இன்றுமே நாகம் சரிந்திட்ட
வெள்ளமாய் ஓடி வந்து
புலமாகு வயலோடு கோயிலில் சேருமே
வள்ளலார் நாகர் பதியான்
கொலுவாக இருந்தருள் புரிகின்ற கோயிலிது
குல நாக தேவன் அருளே.

திருச்சிற்றம்பலம்:-

ஆதியுமா யந்தமுமாய் சோதியுமாய்ச் சிவமுமாகி
மேதினியு மாந்தரெல்லா மேத்துபெருங் கடவுளாகி
சாதினிய நஞ்சுண்டு நாவடக்குக் கருகண்டனாகி
போதரிய விடநாகமொடு நாகர்பதி மீதிலமர்ந்தாரே.

படமாடு மைந்துதலை விடநாக மொடுகூட
சுடலைநீ றணிமேனி யுடனுடுக் கைக்கொண்டு
படலாகச் சிரசோட்டை யணியாக அழகாக்கி
நடமாடி நாகர்பதி மீதிலமர்ந் தாரே.

கடலொலியம் வயல்வெளியும் கண்ணினிய வெண்மணலும்
மடலினிய மருதமரம் மண்ணிலுறு வேம்பு வில்வை
தடலனைய பனை தென்னை தண்ணீருள் குளவாழை
கடலேறு நாகர்பதி தன்னி லமர்ந்தாரே.

உமையு மொருபாக முறுயானை முகத்தோனும்
வினை யெதிர்க்கு முருகோனு மிருபாக மாய்க்கொண்டு
குறைசேரா விடபவா கனமோடு படமாடு நாகமாய்
வினைதீர்க்கும் வேதனாய் நாகர்பதி மீதிலமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறவையினங் கன்றுடனே கூடியுலாக் கொள்ள
பறவையினங் குண்டுகளிற் பாட்டிசைத்தே பாட
பெருமாலா வாரவாரித்தே வாழுமிடங் கண்டு
கருநாக மொடுநாகர் பதி மீதிலமர்ந்தாரே.

குலமாந்த ரிசையோடு பலமாகப் புகழ்பாடி நடனமாட
பலமாந்தர் பணிவோடு பக்தி கொள்ளக் கோயில் முன்னே
வலம்வந்த மடவார்க ளிசைபாட முகிலதிர மழையென் றஞ்சி
சிலமந்தி மருள் கொண்டு மருதேறி முகில் பார்க்கும் நாகையாவே.

**வேறு:-**

நற்கேணி புற்கேணி தீர்த்தக்கேணி ஞாலமிகு
கற்பினிய பெண்டுகட்கோர் மற்றைக்கேணி
சொற்பரிய வினைதீர்க்கு மொற்றைக்கேணி பூச்சொரியும்
நற்புறுதா மரைக்கென்றே யாகுகேணி
சுற்றவரப் பூமரங்கள் பெருமலரிகீழாக பாற்பரிய
புற்றுகளும் பாம்புகளும் புளுவினங்களோடு
கொற்றவரும் போற்றுபுகழ் தம்பிரானாய் கூறுதனில்
உற்றதிரு நாகர்பதி மீதிலமர்ந்தாரே.

வானவரும் பூதலரும் மகிழ்து பாட
வையகத்தார் வாளவழி காட்டி மண்ணில்
கோனவராய் நாகர்பதி மீதிலேகி
குவலயத்தார்க் கிடர்தீர்க்க வருளுந்தேவே
ஆனகுறை மனத்தேக்கம் மகிழ்வேயில்லா
மருவுமன நோய்களெல்லாந் தீரவேண்டி
தேனவரு முன்பெயரைப் புகழ்ந்து பாட
திடமனதைப் பெற்றிடவே யருளுவாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுறு முன்நாம மெண்ணில் நாவில்
அன்னியப் பேய்களும் பில்லி சூனியம்
பொருளுறு பூதமும் பின்னிய செய்வினையொடு
புடைபடு மோகினி கொள்ளிவால் பேயும்
தெருவிலே தொடரும் துஷ்டப் பேய்களும்
வருவிட சுரங்கள் எட்டெட் டானவும்
மருளுறு சன்னி நான்மூன் றொன்றும்
வெருண்டே யோட விடை தருவாயே.

படை நடுங்கு பாம்புவிச மறுப்பாய் போற்றி காணும்
பக்தர் முன்னே தோன்றுமைந்து சிரத்தாய் போற்றி
வடை விரும்பு மருதடிவாழ் வயிரவரே போற்றி நாளும்
வக்கிரகம் தீர்க்கும் கந்தக் கடவுள் போற்றி
துணையாக வுமைகொண்ட தேவே போற்றி உற்ற
தத்துவ வினாயகத் தவத்தே போற்றி
இணையாக வயல்வாழு கண்ணகைத் தாயே போற்றி எம்மை
இப்பரத்துக் கார்நாக தம்பிரானே போற்றி போற்றி.

## வாடைவிடு தூது

ஊர் சுற்று மிளங்காற்றே உயிர்காக்கும் பரம்பொருளே
பேர் இரைச்சல் செயுமுனை புகழுரைப்பே னென்வாயால்
பார் போற்றும் நாகர்பதி பரப்பிலமர்ந் தான்பேரைச்
சீர் இனிக்க என்காதில் சிறப்பாகப் பேசாயே.

கடலினிலே கருக்கொண்டு கனமழையைக் கொடுப்பவரே
திடமுடனே யுன்புகழைத் தினந்தோறும் பணிந்திடுவேன்
கடவுளது நாகர்பதி தன்னிலுறை பிறையாளன்
படஒலிசேர் மணிநாதம் என்காதில் ஒலிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலெனும் பூங்காற்றே தேன்மணக்கு மிளந்தளிரே
என்னறிவு உள்ளவரை நான்மறவே னுன்பெயரை
தென்னவனாம் நாகர்பதி மீதிலுறை தேவனுக்கு
நன்திகழும் பூசைமணம் நானுணர முகராயே.

நாடெல்லாம் பவனிவரும் நலமான குளிர்காற்றே
கூடியுனைக் கும்பிடுறேன் கனிந்தொன்று சொல்வாயா
பாடலுறு நாகர்பதி படமாடு நாகமுடன்
ஆடலுறும் தாண்டவத்தை என்கனவில் விழிக்காயே.

வடதிசையில் எழுங்காற்றே வானுயரப் பறப்பவரே
குடகடலிற் குளிப்பவரே கூப்பிடறே னென்சொல்கேள்
படங்கொண்ட நாகமுடன் கூடவிரு தம்பிரானை
தொடுமிசைகள் கப்பலிசை தேன்முதுகில் சுமவாயே.

சாந்தமுடன் வருங்காற்றே சகலரையும் தொடுபவரே
காந்தமெனப் பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் பெருமானாம்
ஏந்துபுகழ் பதிநாக தன்னிலமர்ந் திறையோனின்
சாந்தவிச நோய்நொடிகள் திர்க்கும்விதம் பரப்பாயே.

வாடையிலே வந்தசப்த தோத்திரத்தைத் தானுரைக்க
பீடையறும் பகழ்பொலியும் போற்றுசந்தா னம்பெருகும்
பாடையுறு வேளையிலும் பரமனருள் தேடிவரும்
வேளையிது வோதுதற்கு விடைகொள்வேன் அருள்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி அறிதல்.

நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் மீது சிறப்பான பாமாலையை பாடி அருளிய திரு. கணபதிப்பிள்ளை முருகையா DAM அவர்கள் பிரித்தானியாவில் வசித்தாலும் இந்த ஆலயத்தின் மீது கொண்ட இடையறாத பக்தியினால் உள்ளத்தெழுந்த சிந்தனை வடிவமான இப்படைப்பாற்றலை நல்கியமைக்காக அவருக்கு முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூலாக்கத்திற்கு உதவிய ஆலய தலைவர், நிர்வாக சபையினர், அன்பர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறுவது சாலப் பொருத்தமானதாகும்.

இதனை கணனி மயப்படுத்தி உதவிய வைசாலி கணனித் தொழில்நுட்பப் பட்டறை இயக்குனருக்கும் இதனை அச்சிட்டு வடிவமைத்து அளித்த தீபன் அச்சகத்தினருக்கும் வாழ்த்துரை, சிறப்புரை வழங்கிய பெருந்தகைகளுக்கும் இந்நூலை வாசித்து பயன் பெற இருக்கின்ற அன்பர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம். பக்தர்கள் சார்பில் அன்பர்,

**K.K. யோகநாதன்**
B.A. Dip, in Edu, Dr. of RAMP
அதிபர் யா/தும்பளைசிவப்பிரகாச
மாகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Theepan Offset Printers, V.M.Road, Point Pedro 0776520315

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org